663

# இந்தியத் தொழிற்சங்க சரித்திரம்

663
1-56



சிரியர்: லைக்குஹன்

MADRAS
X97D.2U
N55
1130.16

# இந்தியத் தொழிற் சங்க சரித்திரம்.

ஆசிரியர்:

A. கலைக்குஹன்

விலை அணா 0—6—0.

[V. P. P. கிடையாது.]

வெளியிட்டோர் — உரிமையாளர்


குஹன் பதிப்பகம்

தளவாய்புரம்

செட்டியார்பட்டி, P. O. (வழி) இராஜபாளையம்.

X97D.இல
N55

முதற் பதிப்பு 1955. பதிப்பு உரிமை பெற்றது.



TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE MADRAS
113016

## சமர்ப்பணம்.

எல்லா வகையாலும் திருத்தும் முறையில் ஆக்கியும் என் ஆக்கத்திற்கு வேண்டுவன — செய்தும், என்னை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுவன செய்துவரும் பெருந்தகை

உயர்திரு பார்த்த ஸாரதி அவர்கட்கு

சமர்ப்பணம்.

# இந்நூலைப் பற்றி!

பொதுவாக தொழிலாளர்பால் எனக்கு ஏற்பட்ட அனுதாப உணர்ச்சி குறிப்பாகப் பொருளாதார முறையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பால் ஏற்பட்ட அனுதாப உணர்ச்சி. என்னைப் பொருளாதார அடிப் படையில் உருவான கோரிக்கைகளுக்காக எழும் போராட்டங்களை உன் னிப்பாகக் கவனிக்கவும். தீர்க்கமாக சிந்திக்கவும், நியாயமான போராட் டங்கள் வெற்றிபெற என்னால் ஆவன செய்யத் தூண்டுகிறது.

இந்த உணர்வால் ஆட்கொள்ளப்பட்ட நான் "இந்திய தொழிற்சங்க சரித்திரம்" அடிமுதல் நுனிவரை எம் முறையில் உருவாகி, எவ்வாறு வளர்ந்து எப்படி வாழுகிறது என ஆராய்ந்து பார்க்க முனைந்தேன். அதன் விளைவே இச்சிறு நூல்!

இந்நூல் இந்நாட்டில் உருவான தொழிற்சங்க இயக்க வரலாற்றைக் கொள்கை ரீதியாக எழுந்தப் பிரச்சனைகளையும், அதன் விளைவாய் இயங் கிய இயக்கமுறைகளையும், ஒரு சிறிதும் விட்டுப்போகாமல் எடுத்துக் கூறும் பூரணத்துவம் பெற்றது எனக்கூற இயலா! பொதுவாக வரலாற் றைப் பதிவுசெய்யும் பண்பாட்டு வழியில் கூடுமான வரையில் முக்கிய மான வரலாற்றுக் குறிப்புகள் விட்டுப் போகாவண்ணம் உருவாக்கிய சிறு ஏடே! விரிவாகக் கூறுவதென்றால் பல்வேறு அலுவலுக்கிடையே அதிக காலதாமதமாகக் கூடுமெனக் கருதியே சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது.

தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள பேரறிஞர்கள் இந்நூலில் தவறுகண்டால், தவறு கண்ட இடத்து எடுத்துக் காட்டினால் பணிவன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்!

இந்நூலை வெளியிட சகல வழிகளிலும் ஒத்துழைத்த அன்பர் "பார்த்த ஸாரதி" அவர்கட்கும், மற்றும் ஏனைய அன்பர்களுக் கும் எம்நன்றி உரித்தாகுக.

வணக்கம்,

A. கலைக்குமரன்.

# — பதிப்பின் உரை. —

தமிழகத்தில் கடந்த காலத்தில் இருந்த நிலைமாறி – புதிய உத்வேகமும், அறிவுதாகமும், இலக்கிய அபிவிருத்தியும் அதிவேகமாக இருக்கும் தருவாயில் – மகத்தான இலக்கிய மறுமலர்ச்சி, நடைமுறையில் காண்கின்றோம். நாட்டில் வளர்ந்து வரும் அறிவுப்பசிக்குத் தேவையான நல்லுணவைச் சமைத்திட வேண்டுமென்ற நன்னோக்கொடு. தோன்றிய பதிப்பகமே **"குஹன் பதிப்பகம்"** இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்ய பூத்து மலர்ந்த முதல் மலர்தான் **"இந்தியத் தொழிற்சங்க சரித்திரம்"**

இவைபோன்ற பல நூல்களை வெளியிட்டு இலக்கியத் துறைக்கு சிறப்பான பணியாற்ற வேண்டுமென்பதோடு மக்களின் எண்ணத்திற்கு மாபெரும் உதவியளித்திட வேண்டி தொடர்ந்து பல நூல்களை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

எனவே எமது பதிப்பக நோக்கம் ஈடேர ஊக்கமளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்,

**பதிப்பகத்தார்.**



# தொழிலாளி வர்க்கமும்-தொழிலாளி வர்க்கத் தத்துவமும்.

எந்த எந்த இடங்களில் தொழிற்சாலைகள் தோன்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே இடத்தில் ஒரே முதலாளியின் கீழ் வேலை செய்கின்றனரோ, அங்கெல்லாம் தொழிலாளி வர்க்க இயக்கம் தோன்றுவது நிச்சயம். ஆரப்பத்தில் ஸ்தாபன ரீதியான இயக்கம் ஏற்படுவது கிடையாது. புத்திப் பூர்வமான வர்க்கப் போராட்டப் பாதை தெரியாமலிருக்கிறது. ஆயினும் முதலாளியின் அகோர சுரண்டலைத் தாங்கமாட்டாது திடீர் திடீரென வர்க்கப்போராட்டங்கள் வெடிக்கின்றன. ஸ்தாபன அமைப்பு இல்லாததால் அரசாங்கத்தின் அடக்குமுறையையும், முதலாளிகளின் நயவஞ்சகச் சூதுகளையும் சமாளிக்கப் போதிய சக்தியில்லாமல் இப்போராட்டங்கள் சில, பல சமயங்களில் தோல்வியுறுகின்றன.

சிறிது காலம் சென்றவுடன் ஸ்தாபனத்தின் அவசியத்தைத் தொழிலாளி வர்க்கம் உணர ஆரம்பிக்கின்றது. ஸ்தாபன ரீதியில் தன்னுடைய கோரிக்கைகளுக்காக நடத்திய போராட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்களில் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய வர்க்கநல உரிமைகளுக்கும், முதலாளி வர்க்கத்தின் நல உரிமைகளுக்கும் அடிப்படை முறண்பாடு இருப்பதையும், முதலாளி வர்க்கம் தன்னுடைய சுய நலம்மிக்க குறுகிய வர்க்க நல உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சமுதாயத்திலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களையும், இறுதியில் அரசாங்கத்தையும் பரிபூர்ணமாக உபயோகித்துக்கொள்கிறது என்பதையும்

படிப்படியாக உணர ஆரம்பிக்கின்றது. அத்துடன் முதலாளி வர்க்கம் இஸ்டப்பூர்வமாக தொழிலாளி வர்க்கத்தின் எந்தக் கோரிக்கையையும், விட்டுக்கொடுப்பதில்லை என்பதையும், அதற்கு நேர்மாறாக தொழிலாளி வர்க்கம் கோறும் சின்னஞ்சிறு உரிமையைக் கூட தன்கையில் உள்ள அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மிகமூர்க்கத்தனமாகவும், பலாத்காரமான முறைகளிலும் முதலாளி வர்க்கம் எதிர்க்கிறது என்பதையும், தொழிலாளி வர்க்கம் தெளிவாக உணரத் தொடங்குகிறது.

இங்கிலையில்! தொழிலாளி வர்க்கம் தன்னுடைய பொருளாதார நல உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அபிவிருத்தி செய்து கொள்வதற்கும், தொழிற் சங்கங்களைக் கட்டிவளர்ப்பதோடு தன்னுடைய தொழிற்சங்க உரிமைகளையும் அரசியல் நல உரிமைகளையும், பாதுகாத்துக் கொள்வதற்கும், அபிவிருத்திச் செய்து கொள்வதற்கும் தனக்கென்று ஒரு அரசியல் கொள்கையையும், தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், வகுத்துக்கொண்டு, தனக்கென்று ஒரு அரசியல் கட்சியையும் உருவாக்கிக்கொள்கிறது

பின்னர் தன்னுடைய அரசியல் கட்சியின் தலைமையின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் நல உரிமைகளை அஸ்திவாரமாகக் கொண்ட சகல பகுதி மக்களின் நல உரிமைகளையும், பாதுகாக்கக் கூடிய பொதுவான திட்டத்தின் கீழ் சகல பகுதி மக்களையும் ஒன்று திரட்டி தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் அரசியல் அமைப்பையே முற்றிலும் மாற்றி அமைத்துப் புதிய சமுதாய அமைப்பையே உருவாக்குகிறது. இதுதான் உலகில் எல்லா தேசங்களிலும் ஏற்படும், ஏற்பட்டுள்ள, ஏற்படப்போகிற தொழிலாளி வர்க்கத்தின் சரித்திர பூர்வமான வளர்ச்சியாகும்.

## ஸ்தாபனத் தோற்றமும் - அதன் அழிவும்.

இந்திய தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சியும், இவ்வாறே! கடந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் 1870—1880ல் பம்பாய் நகரத்தில் சில பஞ்சாலைகள் ஏற்பட்டன. அந்நாளில் தொழிலாளிகளைப் பாதுகாக்கக்கூடிய எந்தவிதமான சட்டமும் கிடையாது. தொழிலாளிகளிடம் தினசரி 12, 14, 16 மணி நேரம் வரை தங்குத்தடையின்றி வேலைவாங்கப்பட்டு வந்தது.

முதலாளிகளின் அகோரமான சுரண்டல் கொடுமை தாங்கமாட்டாது 1877–1890ம் ஆண்டுகட்கு இடையே திடீர் திடீரென்று ஆங்காங்கு சில வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. குறிப்பாக 1887ல் நாகபுரி "எம்ரஸ்" மில்லில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதாக அறிய முடிகிறது. 1882--1890 ஆண்டிற்கு இடையே சென்னை, பம்பாய் ராஜதானிகளில் மொத்தம் 25 வேலை நிறுத்தங்கள் நடந்ததாக வரலாற்று ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டங்கட்கு யாதொரு விதமான ஸ்தாபன அஸ்திவாரமும் இல்லாததால் முதலாளிகளால் சீக்கிரத்தில் முறியடிக்கப்பட்டன. 1900 ஆண்டிற்குப்பிறகு மனிதாபிமானம் கொண்ட பம்பாய் பத்திராதிபர் ஒருவர் இவர்களுக்கென ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். அதுதான் 1884ல் பம்பாய் பத்திராதிபர் **N. M. லோகாண்டே** என்பவர் தலைமையில் தோன்றிய பம்பாய் மில்தொழிலாளர் ஸ்தாபனம் என்ற சங்கம் வாரவிடுமுறை; இடைவேளை ஓய்வு; தொழிலாளிகட்கு வேலை நேரங்களில் விபத்துக்கள் ஏற்பட்டால் நஷ்டயீடு தருவது போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் தயாரித்து தொழிலா

ளிகளின் சார்பில் பாக்டரிகள் கமிஷனர்முன் சமர்ப்பித்து நடவடிக்கை எடுத்தது. ஆயினும் இந்த நடவடிக்கை ஒரு தொழிற்சங்க ரீதியாகவோ, ஸ்தாபனக் கட்டுக்கோப்புடன் கூடியதாகவோ இருக்கவில்லை. எனவே கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தப் பெயரளவில் தோன்றிய சங்கமும் சீக்கிரத்தில் தொடர்ந்து வேலைசெய்ய முடியாமல் செயலற்றுப் போயிற்று.

---

## (தேசீய இயக்க எழுச்சியும் - தொழில் வளர்ச்சியும் - தொழிற் சங்கத் தோற்றமும்.)

நாட்டு விடுதலை கோரி சிங்கமெனச் சீறிப்பாய்ந்த **லோகமான்ய பாலகங்காதர திலகரைப்** பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1907-ம் வருஷத்தில் கைது செய்யப்பட்டு 1908-ம் வருஷத்தில் நீண்ட விசாரணைக்குப் பிறகு 6வருஷங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவுடன் பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளிகள் அதை ஆட்சேபித்து 6நாள் அரசியல் வேலை நிறுத்தம் செய்தது. இந்திய தொழிலாளி வர்க்கத்தின் தொழிற்சங்க இயக்கவரலாற்றில் பொன் எழுத்துக்களால் குறிக்கத்தக்க நாள்.

இதுவரை இந்திய தொழிலாளி வர்க்கம் தனது மகத்தான ஒற்றுமை சக்தி அரசியல் காரணங்கட்காக பயன் படுத்தியதே இல்லை. நாட்டுவிடுதலை கோரி எழுந்த தேசிய இயக்கத்தின் சார்பில் செய்த அரசியல் வேலை நிறுத்தமானது தேசிய இயக்கத்தோடு தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு பிற்காலத்தில் தொழிலாளி வர்க்கம் இந்நாட்டின் மாபெரும் அரசியல் சக்தியாக வளருவதற்கு முன்படியாக விளங்கியது.

நீண்ட நெடுங்காலமாக இருந்த தன்னுடைய நாட்டு அரசியல் பொருளாதார அடிமைத்தளைகளைத் தகர்த்து தரை மட்டமாக்கவும், தொழிலாளி வர்க்கம் தன்னைத்தானே ஸ்தாபன ரீதியில் கட்டுக்கோப்புடன் கூடிய வலுவான முறையில் அமைத்து இயக்கிக் கொள்ளவும், தகுந்ததோர் சூழ்நிலை இது. இத்தகைய சூழ்நிலையில் வசிக்கும் கோடிக்கணக்கான தொழிலாளி பெருமக்கட்கு தேசிய இயக்க எழுச்சியும் சோஸலிச ஆதர்ஸமும், தொழிற்சங்க இயக்கமும் மகத்தான நம்பிக்கை அளித்திருக்கிறது. ஒற்றுமையின் சக்தியை நன்கு உணர்ந்திருக்கின்றனர். அவர்களின் துன்ப துயரத்துக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் மகத்தான லக்ஷ்யத்தின் முதல் தரிசனத்தைக்காண உதவியுள்ளது. இந்நடவடிக்கையும், சூழ்நிலையும்!

பின்னால் 1918ம் ஆண்டு வரையில் இந்திய தொழிலாளி வர்க்க வரலாற்றிலே குறிப்பிடக்கூடிய சம்பவம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் யுத்தகாலத்தில் ஐரோப்பாக் கண்டம் பூராவும் யுத்தத்தில் சிக்கிக் கொண்டிருந்ததின் காரணமாயும் குறிப்பாக பிரிட்டிஷ் கப்பல் நஷ்டத்தின் விளைவால் பிரிட்டனிலிருந்து ஜவுளி முதலிய சரக்குகள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது குறைந்து விட்டது காரணமாயும் இந்தியாவில் பல தொழிற்சாலைகளும், குறிப்பாக பஞ்சாலைகளும் விருத்தி யடைந்து விட்டன. யுத்தகால மார்க்கெட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த ஆலைகளில் வேலை வெகு ஜோராக நடைபெற்றன. முதலாளிகளுக்கு அந்தக் காலத்தில் கொள்ளை லாபம் கிடைத்தது. ஆயினும் தொழிலாளிகளுக்கு எவ்விதக் கூலி உயர்வோ, வேறு எவ்விதமான சௌகரியங்களோ கிடையாது.

யுத்தம் முடிந்தவுடன் இம்மக்களின் நிலைமை மிகவும் மோசமாய் விட்டது. விலைவாசிகள் மிகவும் அதிகரித்து விட்டன, அரிசி ரூபாய் ஒன்றுக்கு படி $1\frac{1}{2}$ விற்றகாலமது. எங்கு பார்த்தாலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு கொள்ளைகள் ஏற்பட்ட காலமது. இவைகளின் விளைவாக யுத்தம் முடிந்தவுடன் 3—4 வருஷம் வரை இந்தியா பூராவிலும் ஆங்காங்கு வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டவண்ணமிருந்தன.

இங்கிலையில் ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படும் தொழிற்சங்க இயக்கத்தை நேரடியாகப் பார்த்தும், கேட்டும் தொழிலாளரிடம் அனுதாபம் கொண்டிருந்த பலர் தேசீய இயக்கத்தின் சரித்திரரீதியான தேவையின் அவசியத்தால் உந்தப்பட்டு இந்த சமயத்தில் தொழிற்சங்க இயக்கத்தில் பங்கு கொள்ள முன் வந்தனர். இதன் விளைவாக 1918ல் சென்னையில் **பக்கிங்காம் கர்னாடிக் மில்** தொழிலாளருக்கென்று காலம் சென்ற **"வாடியா"** **"சென்னை தொழிற்சங்கம்"** என்ற ஸ்தாபனத்தை உருவாக்கியதைக் காணமுடிந்தது. இந்த ஸ்தாபனத்தின் தலைமையில் 1919ம் ஆண்டில் மிகப் பெரியதோர் வேலை நிறுத்தம் தொழிலாளி மக்களின் வாழ்க்கை வசதி கோரி சென்னை நகரத்தில் நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்குச் சென்னை சர்க்கார் தொழிலாளி மக்கள் மீது பயங்கரமான துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அதேசமயத்தில் இந்தியா பூராவிலும் பல தொழிலாளர் சங்கங்கள் தொழிற்சங்க ரீதியாக ஸ்தாபன கட்டுக் கோப்புடன் தோன்ற ஆரம்பித்தன. சென்னையில் அலுமினியம், டிராம்வே, மின்சாரம், நகரசுத்தி முதலிய பகுதிகளில்

தொழிற் சங்கங்கள் ஸ்தாபிதமாயின. 1917ல் ஜவுளி மில் தொழிலாளருக்கு என **ஆமதாபாத்** நகரில் தொழிற் சங்கங்கள் ஸ்தாபித்ததாக இருந்தாலும், முறையாக, ஸ்தாபன ரீதியாக, ஒழுங்கான கட்டுக் கோப்புடன் கூடிய ஸ்தாபனமாக அமைக்கப் பட்டதாகத் தெரியவில்லை. தொழிலாளிகளின் வர்க்க உணர்ச்சிக்கு ஏற்றதாகவும், முறையான ஸ்தாபன அமைப்புடன் அமைந்த, அமைக்க எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவே.

அதே கால கட்டத்தில் கோவையிலும், தூத்துக்குடியிலும் முறையே **ராமசாமி அய்யங்கார், சிதம்பரம் பிள்ளை** தலைமையில் பஞ்சாலை தொழிற்சங்கங்கள் ஏற்பட்டன. மற்றும் பம்பாயில் இந்திய ஊழியர் சங்க அங்கத்தினர் **N M. ஜோஷியும்** இன்னும் சிலரும் பம்பாய் நகரத்துப் பஞ்சாலைத் தொழிலாளரிடையேயும் ஸ்தாபனத்தை நிறுவி வேலை செய்து வந்தனர்.

## (அகில இந்திய ஸ்தாபனமும் – பூர்ஷுவா தலைமையும்)

இவ்வாறு ஏற்பட்ட பல **தொழிற்** சங்கங்களை இணைத்து தொழிலாளர் இயக்கத்தை தேசிய ரீதியாக நடாத்தும் நோக்கத்துடன் 1920ம் ஆண்டு அக்டோபர் மாதம் பம்பாயில் கூடிய தொழிற்சங்க பிரதிநிதிகளால் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் ஆரம்பத் தலைவர்கள் **லாலா லஜபதிராய்; ஜோஸப் பாப்டிஸ்டா; C. R. தாஸ்; N. M. ஜோஷி; வி. வி. கிரி; சிவராவ்; ஜம்னு தாஸ் மேத்தா** முதலியோராவர்! இவர்கள் அனைவரும் இந்திய பூர்ஷுவா அறிவாளிகள். முதலாளி வர்க்க தேசிய பிரதிநிதித்துவம் வாய்ந்த பிரமுகர்கள். இந்திய தேசிய காங்கிரசின் பிரதான தலைவர்களும் கூட! போர்க்குணம் படைத்த தொழிலாளி

பெருமக்களுக்கு உண்மையிலேயே தலைமை தாங்க விரும்பா விடினும் 1919—1920ல் எழுந்த தேசிய இயக்கத்தின் அவசிய தேவை இவர்களை தொழிற்சங்க இயக்கத்துக்கு தலைமை தாங்கும்படி நிர்ப்பந்தித்தது. இயற்கையிலே போர்க்குணம் கொண்ட தொழிலாளி வர்க்கம் வர்க்கபோதம் பெருவதையோ, அரசியல் விழிப்புறுவதையோ, இந்திய பூர்ஷுவா வர்க்கம் விரும்பவில்லை, எனவே! தான் இந்திய தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்குவதின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் முறுக்கேரிய போர்க்குணத்தின் முனையை மட்டம் தட்டவும், அரசியல் விழிப்பால் ஆற்றும் அரிய செயலைத் தடுத்து நிறுத்தவும் நல்லதோர் வாய்ப்பு கிட்டும் என்பதைக் கண்டனர். பயன்படுத்த முடியும் என்று நம்பினர். 1920 செப்டம்பரில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் அதன் அக்கிராசனரும், தொழிற் சங்கத் தலைவர்களில் ஒருவருமான **லாலா லஜபதிராய்.**

> "நாம் ஒரு புரட்சிகரமான சகாப்தத்தில் இருக்கிறோம். என்ற உண்மையைப் பற்றி பாராமுகமாய் இருப்பதில் பிரயோஜனமில்லை. இயல்பாகவே நாம் புரட்சிகளை வெறுக்கிறோம். நமது பரம்பரைப் பண்பும் அதுவே" என்று கூறினர்"

பின்னல் 1930–34ல் பூர்ஷுவா தலைமைதான் இருமுனைகளிலும் போராடப் போவதாக — ஏகாதி பத்தியத்தை எதிர்ப்பதைப் போலவே — பாமர மக்களின் பேரெழிச்சியையும் எதிர்க்கப் போவதாக — பகிரங்கமாகக் கூறியது. இவ்வித மனோநிலை

யில் இருந்த தொழிற்சங்க தலைமை 1927-ம் வருஷம் வரை—புரட்சிகரமான தொழிலாளிவர்க்க கண்ணோட்டத்துடன் கூடிய தலைமையைப் பெறும் வரை — வெறும் தலைவர்களின் ஸ்தாபனமாக இருந்ததில் ஆச்சரியமில்லை.

## சோவியத் புரட்சியின் எதிரொலியும் - வர்க்கத் தலைமையும் - அதன் அரசியல் நடவடிக்கையும்.

இங்கிலையில் சோவியத் ருஷ்ய புரட்சியின் எதிரொலி இந்தியா பூராவிலும் கேட்க ஆரம்பித்தது. அதன் விளைவாக 1920 ஆண்டிற்கு பிறகு ஆங்காங்கே சில வாலிபர்கள் மார்க்ஸீஸத்தின் பால் இழுக்கப்பட்டனர். 1925-ம் ஆண்டில் இவர்கள் எல்லோரும் கான்பூர் நகரத்தில் ஒன்று சேர்ந்து முதலாவது இந்தியக் கம்யூனிஸ்ட் மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாட்டிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் பிறந்தது. இந்தக் கட்சியில் சேர்ந்தவர்கள் அனைவரும் உடனடியாக இந்தியத் தொழிலாளர் இடையே வர்க்க மனோபாவத்துடன் வேலை செய்வதென்ற முடிவு எடுக்கப்பட்டு, செயலில் ஈடுபட்டனர். இதன் விளைவாக இந்திய தொழிற்சங்க இயக்கத்திலும் புதிய கண்ணோட்டமும், செயல் முறையும், இடம் பெறலாயின.

மாண்டேகு, செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களை காங்கிரஸ் மகாசபை தீவிரமாக எதிர்த்ததின் பயனாக எழுந்த ஸ்டிரைக்கில் 1 லக்ஷத்து 25 ஆயிரம் தொழிலாளிகள் ஈடுபட்டிருந்தனர். பின்னர் 1919 மார்ச்சில் ரௌலட் சட்டமும் நிறைவேற்றப் பட்ட பின்னர் அச்சட்டத்தை எதிர்த்துச் செய்ய ஹர்த்தாலில்

தேசமே கிடுகிடுத்தது. 1917ல் இருந்து 1921 வரை தேசிய இயக்கத்தின் எழுச்சிப் பேரலையைக் கண்டு பயந்து நடு நடுங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய பூர்ஷுவா வர்க்கத்தைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ளும் நோக்கத்தோடு 1921-ம் ஆண்டு **"கான்னுட் கோமகனை"** இந்தியாவுக்கு அனுப்பியது. இள வரசன் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவன் விஜயத்தை பகிஷ்கரித்து காங்கிரஸ் மகாசபையும், காந்தியடிகளும் கோரிய கோரிக்கைக்கு இணங்க 1921ல் நவம்பர் மாதம் 17ம் தேதி இந்தியா வந்துஇறங்கிய **"கானுட் கோமகனுக்கு"** இந்தியா அளித்த வீர வரவேற்பு — அகில இந்திய ஹர்த்தார் — இது வரை இந்தியா கண்டரியாத மகத்தான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்பாட்டமாக விளங்கியது.

இவ்வித சூழ்நிலையில் இந்திய தேசிய இயக்கத்தில் புதிய அம்சம் வளர்ச்சி அடைந்து புதிய போராட்டப் பேரலைக்குத் தூண்டுகோலாய் இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் புதிய சித்தாந்தமான சோஷலிச சித்தாந்தமும் செல்வாக்கு பெற்று வளருவதற்கு உரிய மகத்தான வாய்ப்பு அளித்தது. யந்திர தொழிலாளி வர்க்கம் தேசிய இயக்கத்தின் இத்தகைய சூழ்நிலை யில் அசாத்திய சக்தியுடனும், வீரத்துடனும் தன் சொந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்ததோடு தன் போர்க் குணத்துக்கு ஏற்ப விஞ்ஞான ரீதியான இயக்க, இயல், பொருள் முதல் வாத தத்துவ கண்ணோட்டத்துடன் கூடிய தலைமையை யும் உருவாக்கிக்கொண்டிருந்தது.

## (தற்காப்புப் போராட்டமும் - தொழிற்சங்கத் தலைமை மீது அரசாங்கத் தாக்குதலும்.)

1928ம் வருஷத்துக்குள் இந்திய தொழிற்சங்க இயக்கத் தாயாகிய பம்பாயில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் கீழ் வந்து சேர்ந்தனர். அவர்களுடைய சங்கமாகிய **"கிர்னி காம்கார்"** யூனியனும் இந்தியாவிலேயே தலைசிறந்த தொழிற்சங்கமாக விளங்கியது. சுமார் 45 ஆயிரம் முதல் 1/2 லக்ஷம் அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. 1928ல் பம்பாய் தொழிலாளர்கள் இந்தியாவிலேயே இதுவரை கண்டிராத மகத்தான வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். 1 லக்ஷத்து நாற்பதினாயிரம் தொழிலாளர்கள் 8 மாதம் வரையில் வேலை நிறுத்தத்தை நடத்தி இறுதியில் வெற்றியும் கண்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் சரத்துக்களை முதலாளி நிறைவேற்றாததனால் மீண்டும் 1929ம் வருஷம் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால், இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டவுடன் இந்திய அரசாங்கம் கம்யூனிஸ்ட்களின் செல்வாக்கு வளர்ந்து வருவதைக்கண்டு பயந்து **"மீரட் சதி வழக்கு"** என்ற ராஜ துரோக வழக்கு ஒன்றை ஜோடித்தனர். இதன் மூலம் வளர்ந்து வரும் தொழிலாளி வர்க்க விஞ்ஞான ரீதியான வர்க்கத் தலைமையை மட்டம் தட்டி ஒழித்து விடலாம், அல்லது தடை படுத்திவிடலாம், என எண்ணியது. பம்பாயில் இருந்த தொழிலாளர் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட பிறகு பம்பாய் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பற்றி விசாரித்து ரிப்போர்ட்செய்யஒருவிசாரணைகமிட்டியைஏற்படுத்தியது.

இந்த விசாரணைக் கமிட்டி தொழிற்சங்க தலைவர்களுக்குத் தங்களுடைய கட்சியை விவாதிக்கச் சந்தர்ப்பம் கூட கொடுக்காமல் வேலை நிறுத்தம் செய்ததே தவறு. அதற்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு — காரணமே இல்லையெனத் தீர்ப்புக் கூறியது. இந்தச் சந்தர்ப்பத்தில் "மீரட் சதி" வழக்கில் பிரிட்டிஸ் அரசாங்கம் சம்மந்தப் படுத்தியிருந்த நபர்கள் யார்? அவர்கள் இந்திய மக்களுக்கும், இந்நாட்டு தேசிய இயக்கத்துக்கும், தேச விடுதலைக்கும் ஆற்றிய மகத்தான தியாகங்களும் எப்படிப்பட்டவை? பிற்காலத்தில் இந்நாட்டு பொது வாழ்வில் அவர்கள் பங்கு என்ன? முதலிய அம்சங்கள் மக்கள் அறிந்து கொள்வது மிக மிக அவசியமானது எனவே அவர்களை நாம் அறிமுகப்படுத்திக் கொள்வோம். அந்தக் காலக்கட்டத்தில் அரசியல் வாழ்வில் அவர்கள் வகித்த உத்தியோகமும், உரிய பங்கும் காண்க!

**S. A. டாங்கே,** — தொழிற்சங்க காங்கிரஸ் உதவிக்காரியதரிசி: கிர்னி காம் கார் யூனியனின் பொதுக்காரியதரிசி இந்நாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தலைவர்.

**கிஸோரிலால் கோஸ்.** — வங்க மாகாண தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியதரிசி.

**D. R. தெங்டி.** — தொழிற்சங்க காங்கிரஸின் மாஜித்தலைவர். நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினர்.

| | |
|---|---|
| S. V. காட்டே. | தொழிற்சங்க காங்கிரஸ் முன்ளுள் உதவிக்காரியதரிசி. பம்பாய் முனிசிபல் தொழிலாளர்கள் யூனியன் உபதலைவர். |
| K. N. ஜோக்லேகர் | ஜி. ஐ. பி. ரயில்வே தொழிலாளர் சங்கக் காரியதரிசி. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர். |
| S. H. ஜாப் வாலா | அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சங்க சம்மேளன காரிதரிசி கிர்னி காம்கார் யூனியனின் உபதலைவர்களில் ஒருவர். |
| ஷௌகத் உஸ்மானி | பாம்பாயில் உள்ள உருது தொழிலாளி வர்க்கத்தின் பத்திரிக்காசிரியர். |
| முஸாபர் அஹமத் | தொழிற்சங்க காங்கிரஸ் உபதலைவர். வங்காள தொழிலாள — விவசாயக் கட்சி காரியதரிசி. |
| பிலிப்ஸ்ப் ராட் | தொழிற்சங்க காங்கிரஸின் மாஜி நிர்வாகி. |
| P. F. பிராட்லி | பிரிட்டனின் உள்ள அமால் காமேடட் என்ஜினியரிங் யூனியன் லண்டன் ஜில்லா கமிட்டியில் அங்கம் வகித்தவர். ஜி.ஐ.பி. ரெயில்வே தொழிலாளர் யூனியனிலும், கிர்னி காம்கர் யூனியனிலும் நிர்வாகி. அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் உபதலைவர். |

| | |
|---|---|
| S. S. மிராஜ்கர் | கிர்னி காம்கார் யூனியனின் உதவிக் காரியதரிசி. |
| பி. ஷி. ஜோஷி | ஐக்கிய மாகாண தொழிலாளர் — விவசாயிகள் கட்சியின் காரியதரிசி. இந்நாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தலைவர்களில் ஒருவர். |
| A. A. ஆல்வி | கிர்னிகாம்கார் யூனியனின் தலைவர். |
| G. R. கேஸல் | கிர்னிகாம்கார் யூனியனில் பதவி வகிப்பவர். |
| கோபால் பாஸர் | 1928 ம் வருஷம் நடைபெற்ற இந்தியா சோஷிலிஸ்ட் வாலிபர் மகாநாட்டு அக்ராஸனர். இந்திய சோஷிலிஸ்ட் இயக்கத்தில் பிரதான பங்கு கொண்டவர். |
| G. M. அதிகாரி | பம்பாய் பிரபல பத்திராதிபர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தலைவர். |
| M. A. மிஜீத் | கிலாபத் இயக்கத்தில் பிரதான பங்கு கொண்டவர். பஞ்சால கீர்த்தி கிஸான் கட்சி காரியதரிசி. பஞ்சால் வாலிபர் லீக்கின் ஸ்தாபகர் |
| R. S. நிம்கர். | பம்பாய் தொழிற்சங்க காங்கிரஸின் காரியதரிசி. பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் |

| | |
|---|---|
| | காரியதரிசி. அகில இந்திய தொழிலாள – விவசாயிகள் கட்சியின் பொதுக் காரியதரிசி. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினர். |
| **விஸ்வநாத் முகர்ஜி.** | ஐக்கியமாகாண தொழிலாளர் – விவசாயிகளின் கட்சித் தலைவர் |
| **கிதர் நாத் ஷேகல்.** | பாஞ்சால தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர். பாஞ்சால மாகாண காங்கிரஸின் நிதிக் காரியதரிசி. அகில இந்திய வாலிபர் லீக்கின் அங்கத்தினர். |
| **ராத ராமன் முத்ரா.** | வங்கமாகாண சணல் தொழிலாளர் யூனியன் செயலாளர். |
| **தர்னி K. கோஸ்சுவாமி.** | பிரபல தொழிற்சங்க வாதி. வங்காள தொழிலாள — விவசாயிகளின் கட்சிக் காரியதரிசி. |
| **கௌரி சங்கர்.** | ஐக்கிய மாகாண தொழிலாள – விவசாயிகளின் கட்சியின் நிர்வாகி!. |
| **ஷம்ஷுல் ஹுதா.** | வங்காள போக்குவரத்து தொழிலாளர் யூனியனின் காரியதரிசி. |
| **ஷுபநாத் பானர்ஜி.** | வங்காள சணல் தொழிலாளர் யூனியனின் தலைவர். |

| | |
|---|---|
| **கோபிந்திர சக்கரவர்த்தி.** | கிழக்கிந்திய ரயில்வே யூனியனின் உத்தியோகஸ்தர். |
| **ஷோஹன் சிங்ஜோஷ்.** | அகில இந்திய தொழிலாள விவசாயிகளின் கட்சி முதல் மாநாட்டின் தலைவர் இன்றைய கம்யூனிஸ்ட் தலைவர்களில் முக்கியமானவர். |
| **M. G. தேசாய்** | பம்பாய் சோஷலிஸ்ட் பத்திரிக்கை ஸ்பார்க்கின் ஆசிரியர். |
| **அஜீத் பிரசாத்.** | வங்காள விவசாய — தொழிலாளர் கட்சியின் ஊழியர். |
| **லக்ஷ்மணராவ் கடம்.** | ஜான்சி முனிசிபல் தொழிலாளிகளின் தலைவர். |
| S. H. ஹட்சின்ஸன். | "நியூஸ் பார்க்" ஆசிரியர். |

## ( தீவிரவாதிகட்கும் - மிதவாதிகட்கும் - கருத்து மாறுபாடும் - ஸ்தாபன பிளவும் )

ஆனால் அரசாங்க நடவடிக்கை இவ்விதமிருக்க கம்யூனிஸ்ட்களுடைய செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்தது. S. I. R. ஜி ஐ. பி. போன்ற ரயில்வே தொழிற்சங்கங்களும் கம்யூனிஸ்ட்களுடைய செல்வாக்கிலேயே இருந்தது. இதன் விளைவாக 1926ம் வருஷத்தில் இருந்தே இந்திய தொழிற்சங்க காங்கிரஸிலேயும், கம்யூனிஸ்ட்களுக்கும், மிதவாதிகளுக்கும் போராட்டம் நடந்துகொண்டே வந்தது. 1928-ல் நாகபுரியில் நடந்த அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸில் கம்யூனிஸ்ட்

பிரதிநிதிகள் மெஜாரட்டியாய் இருந்தனர். ஆகவே அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களே நிறைவேறின. இதன் விளைவாய் மிதவாதிகள் **N. M. ஜோஷி, V. V. கிரி, ஜம்னதாஸ் மேத்தா** போன்றவர்களின் தலைமையில் காங்கிரஸிலிருந்து பிரிந்துபோய் அகில இந்திய தொழிற்சங்க சம்மேளனம் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இவ்வாறு பிரிந்து போவதற்கு கூறிய மூன்று காரணங்கள்!.

**முதலாவதாக:—** அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ், சர்வதேச தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைக்கவேண்டுமென்பது.

**இரண்டாவதாக:—** ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் மாநாட்டுக்குத் தனது பிரதி நிதிகளை அனுப்ப வேண்டு மென்பது.

**மூன்றாவதாக:—** பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் இந்திய தொழிலாளர்களின் நிலை மையை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட "விட்லிகமிஸனுடன்" தொழிற்சங்க காங்கிரஸ் ஒத்துழைக்க வேண்டுமென்பது

1925ம் வருஷத்துக்குப்பின்னால் வர்க்க உணர்வுடன் வேலை செய்யும் கம்யூனிஸ்ட்களின் முன்னேற்றத்தால் தொழிலாளர் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி கண்டு நடுநடுங்கிய பிரிட்டிஸ்

ஏகாதிபத்தியம் இந்திய விடுதலையைத் துரிதப்படுத்தும் அகில இந்திய தொழிற்சங்க நடவடிக்கையின் முற்போக்கு நிலையைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து விட்டது. அதோடு இந்திய மிதவாதிகளும் அந்த நடவடிக்கைக்குத் தனது ஆதரவும் நல்கி, தேசிய இயக்கத்தில் முறுக்கேறிய தொழிலாளி வர்க்கத்தைத் தனது லிபரல் மனப்பான்மைக்குக் கொண்டுவந்துவிடப் பெருமுயற்சி எடுத்தனர். அதன் விளைவே இம்மூன்று கோரிக்கைகளும்.

1928-ம் வருஷம் ஜூன்மாதம் 14-ம்நாள் லண்டன் டைம்ஸ் "சமீப காலத்தில் இந்திய தொழிலாளர் நிலமையில் பிரிட்டிஷ் தொழிற் சங்க காங்கிரஸ் காட்டும் அக்கரையின் விளைவாக இந்திய தொழிற் சங்கங்கள் இன்னும் சிறந்த முறையில் உருவானால் கம்யூனிஸ்ட்கள் அவற்றிலிருந்து வெளியேற்றப் பட்டால் அது நன்மை பயப்பதாக இருக்கும்" என்றும் 1929 ஜனவரியில் சட்டசபையில் வைஸ்ராய் "**இர்வின் பிரபு**" செய்த பிரசங்கத்தில் "கம்யூனிஸ்ட்களின் கொள்கைகள் வேகமாக பரவுவது கவலையுண்டாக்குகிறது என்றும்" கூறியது. பின்னால் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக விளங்கியது.

## (அனுபவப் போதமும் - ஸ்தாபன ஐக்கியமும்)

இங்கிலையில் பிரிந்து சென்ற இந்திய தொழிற்சங்க இயக்கம் 1928 முதல் 1937 வரை அகில இந்திய துறையில் பிரிவுபட்டே இருந்தது. இந்திய அரசாங்கமானது முதன் முதலில் மிதவாதிகளுக்குச் சில சலுகைகள் காட்டி அதன் மூலமாக இந்தப்பிளவு என்றென்றைக்கும் நிரந்தரமாக நிலைத்து நிற்பதற்குத்

தீவிரமான முயற்சி எடுத்தது. உதாரணமாக 1930ல் எல்லா ரயில்வே தொழிலாளர் சங்கங்களையும் இணைத்து அகில இந்திய ரயில்வே **"மென்ஸ் பெடரேஸன்"** என்ற ஸ்தாபனத்தை **மிதவாத** கோஷ்டியினர்கள் ஏற்படுத்தினர்கள். உடனே இந்தியஅரசாங்கம்இந்தஸ்தாபனத்தைஅங்கீகரித்துவருஷத்துக் கொருமுறை அதன் பிரதிநிதிகளோடு, ரயில்வே போர்டு மெம் பர்கள் சேர்ந்து கூடி விவாதித்து ரயில்வே தொழிலாளிகளின் பிரச்சனைகளைத்தீர்த்து வைப்பதாகவும் கூறி ஏற்பாடு செய்தது. ஆனால் நடைமுறையில் இந்தமாநாட்டினுல் எவ்வித பிரயோஜன முமில்லை. ஏற்பட்டதாகவும்தெரியவில்லை. இந்தசம்மேளனத்தின் பிரதிநிதிகள் ஒவ்வொரு கூட்டத்திலும் ரயில்வே தொழிலாளி களின் சார்பில் வைத்து கோரிக்கைகள் எல்லாம் அநேகமாக நிராகரிக்கப்பட்டேவந்தன. 1930—32 வருஷங்களில் தோன்றிய பொருளாதார நெருக்கடியை பயன் படுத்திக்கொண்டு இந்திய முதலாளிகள் தொழிலாளிகளின் சம்பளத்தை 12½% முதல் 25% வரை குறைத்தனர். இதன் விளைவாக இந்தியா பூராவும் பல வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டன. இந்த வேலைநிறுத்தங்கள் எல்லாம் தற்காப்பு போராட்டமே. அதாவது முதலாளிகளின் தாக்குதல்களை எதிர்த்து அதைத்தடுப்பதற்காக நடத்திய போராட்டங்களாகும், இருப்பினும் தொழிலாளர் இயக்கம் பிளவு பட்டிருந்ததை சர்க்காரும், அதன் அடித்தளமான முதலாளி வர்க்கமும் நன்கு பயன் படுத்திக்கொண்டு இப்போராட்டங்களை அடக்குமுறையைக்கொண்டு முறியடிப்பதில் வெற்றியடைந்தனர் மேலும் ஆரம்பத்தில் மிதவாதிகளுக்குச் சில பலசலுகைகள் காட்டிய அதே சர்க்கார் பின்னல் தங்களுடைய லக்ஷியப் நிறை

வேறியபின்னர் சீர்திருத்தவாதிகளின் தலைமையில் நடைபெறும் போராட்டங்களையும், கொடிய அடக்குமுறைகளைக் கொண்டு நசுக்கினார்கள். உதாரணமாக 1931-ம் வருஷ முடிவில் **V.V.கிரியின் தலைமையில்** நடந்த எம். எஸ். எம். ரெயில்வே தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தையும், 1937ம் வருஷம் ஆரம்பத்தில் அதே **V. V. கிரி** அவர்களின் தலைமையில் நடந்த கிழக்கிந்திய ரயில்வே தொழிலாளரின் வேலை நிறுத்தத்தையும் மற்ற வேலை நிறுத்தங்களைப் போலவே கொடிய அடக்குமுறை களைக் கொண்டு முறியடிக்கப்பட்டனர்.

இதன் விளைவாக இந்தியதொழிற்சங்க இயக்கம்மீண்டும் ஒன்றுபடவேண்டும் என்ற உணர்ச்சி தொழிலாளரிடை அபரிமிதமாக வளர்ந்தது. நடைமுறை மகத்தான அனுபவம் 1934ம் வருஷம் முதலே தொழிற்சங்க இயக்க இரு சாரரிடையேயும் — கம்யூனிஸ்ட் கோஷ்டியிடையேயும் மிதவாத கோஷ்டியிடையேயும் — ஒன்றுபட பலமாக நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. இந் நிலையில் மிக மிகத் தீவிரமாக மிதவாதிகளை விடக் கம்யூனிஸ்ட் கோஷ்டியாரே ஒன்றுபடுவதற்கான பெருமுயற்சி எடுத்தனர். இம்மகத்தான முயற்சி 1937-ல் எந்த நாகபுரி மாநாட்டில் பிளவுண்டு தொழிற்சங்க இயக்கம் வெவ்வேறானதோ அதே நாகபுரிப் பட்டிணத்தில் நடந்த அகில இந்திய தொழிற் சங்க மாநாட்டில் ஒன்றுபட்டது. மக்கள் சக்தி வெற்றியும் கண்டது.

## (காங்கிரஸ் மந்திரி சபைகளும் - தொழிலாளி வர்க்க வாழ்க்கை வசதி போராட்டங்களும்)

இந்திய தொழிற்சங்க இயக்கம் இதுவரை நடத்திய போராட்டங்கள் எல்லாம் அநேகமாகத் தற்காப்புப் போராட்டங்களே. 1937ல் தேசிய காங்கிரஸ் தேர்தலில் ஈடுபட்டு இந்தியாவில் பெரும் பான்மையான மாகாணங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்யத்தொடங்கின. அதைத் தொடங்கி இந்திய தொழிலாளி வர்க்கம் சுய ஆட்சி ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தனது வாழ்க்கை வளப்பத்துக்குரிய வகைபான அமைப்பை நாடி வெகு வேகமாகி முன்னேறியது. நாட்டில் எங்கும் கட்டுப்பாடில்லாத தொழில்களில் வேலைசெய்யும் தொழிலாளரிடையேயும் கூட தொழிற்சங்கங்கள் தோன்றலாயின 1928ல் 29-ஆக இருந்த தொழிற்சங்கங்கள் 1938ல் 296 தொழிற்சங்கங்களாக உயர்ந்தது

இந்த சூழ்நிலையில் ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கம் நாடெங்கும் புதிய கோரிக்கைகள் பல முன்வைத்துப் போராடி மகத்தான வெற்றியுங் கண்டனர். உதாரணமாக 1938ல் வங்க சணல் மில் தொழிலாளர்கள் தொழிற்சங்க அங்கீகாரத்துக்காகவும், கூலி உயர்வுக்காகவும் வங்கமாகாண காங்கிரஸ் கமிட்டியின் மகத்தான ஆதரவுடன் நடைபெற்றது. ஆனால் இந்த ஸ்ட்ரைக்கை பொருளாதார அடிப்படையில்லை என்றும் இந்தியாவில் புரட்சிக்கு வகைசெய்ய கம்யூனிஸ்ட் தலைவர்களால் உபயோகிக்கப்படுகிறது என்றும் கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டி அடக்கி விட முஸ்லீம் லீக்கின் பஸ்லுல்ஹக் மந்திரிசபை பெரு முயற்சி செய்ததை முறியடித்து தொழிற்சங்கம் வெற்றி கண்டது.

1937ல், 40000 தொழிலாளரால் கான்பூரில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ட்ரைக்கின் விளைவாக **பாபுராஜேந்திரரை** தலைவராகக் கொண்ட விசாரணைக்கமிட்டி தொழிலாளரின் கோரிக்கைகள் நியாயமானது என்று தீர்ப்புக்கூற, அதை ஏற்கமறுத்த முதலாளிகளின் திமிரை மட்டம் தட்டி! “கான்பூர் தொழிலாளிகள் தங்கட்காகமட்டும் போராடவில்லை. இந்திய தொழிலாளி வர்க்கம் முழுவதர்க்கும் போராடுகிறார்கள். மனித உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்’’ என்று கூறி தனது முழு ஆதரவும் தந்த ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் பூரண ஆதரவுடன் வெற்றிகண்டனர். இந்தக் காலக்கட்டத்தில் இந்திய தொழிற் சங்க இயக்கம் மகத்தான வளர்ச்சியும் ஸ் தா ப ன வலுவும் பெற்றது.

### (தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்ட் - செல்வாக்கும் பிரிட்டிஸ் அரசாங்க போட்டி ஸ்தாபனமும்)

இரண்டாவது உலகயுத்த பல்வேறு கால கட்டங்களில் எழுந்த பல அம்சங்களின் காரணமாய் கம்யூனிஸ்ட் கட்சிமீது இருந்த தடை 1942ல் நீக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இந்திய தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு வெகுவாகப் பரவ நல்ல வாய்ப்பளித்தது. இந்த சூழ்நிலை இந்திய தொழிற்சங்க இயக்கம் பூரணமாக க யூனிஸ்ட் செல்வாக்கின் கீழ் வந்துசேர உதவியது. கம்யூனிஸ்ட் செல்வாக்கில் வந்தது.

இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் கம்யூனிஸ்ட் செல்வாக்கின் கீழ் இருந்ததின் காரணமாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு தொழிற்சங்க காங்கிரஸ் எவ்விதத்திலும் பயன்படாத

நிலையில் ஏகாதிபத்திய நலனோடு பூரணமாய் ஒன்றி இருந்த **எம். என். ராய்** தலைமையில் 1941ல் இந்திய "தொழிலாளர் பெடரேஸன்" என்ற ஸ்தாபனத்தை நிறுவி வருஷம் ஒன்றுக்கு 13000 ரூபாய் அரசாங்க நிதியிலிருந்து கொட்டி அளந்தனர். உலகத்தின் முன்னுள் இந்திய தொழிலாளரின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் என்று அதைக் காட்டி வந்தது பிரிட்டிஸ் அரசாங்கம் பின்னுல் 1946ம் வருஷம் காங்கிரஸ் — லீக் இரு கட்சிகளின் சம பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைக்கப் பட்ட இடைக்கால சர்க்காரால் தொழிற்சங்க பிரதிநிதித்துவம் பற்றி விசாரிக்க ஏற்பட்ட அரசாங்க விசாரணையில் இந்திய தொழிற்சங்க காங்கிரஸே இந்திய தொழிலாளரின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்று நிரூபிக்கப்பட்டது. சர்வதேச விவகாரங்களில் அன்றுமுதல் இந்திய தொழிற்சங்க காங்கிரஸே இந்திய தொழிலாளர் சார்பில் பங்கெடுத்தது

## (" இந்தியாவை விட்டு வெளியேறு " இயக்கமும் - தொழிலாளி வர்க்கப் பங்கும்.)

இந்நிலையில் 1940–1942 இடையே ஒன்றுபட்ட தொழிற் சங்க இயக்கம் பல வெற்றிகளை சாதிக்க முடிந்தது. தேச பக்தி கடமைகளை நிறைவேற்ற முடிந்தது. இவற்றுல் தொழிலாளி யின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடவில்லை. ஆனுல் தொழிற்சங்க இயக்கத்தில் எழுந்த சீர் குலைவை எதிர்த்து நிற்க அவனுல்முடிந்தது. பஞ்சாலை, ரயில்வே, துறைமுகம், நகரசுத்தி, முனிசிபல், டிராம், உருக்கு, சுரங்கம், என்ஜீனியரிங், தொழிலாளர்கள் பஞ்சப்படி, போனஸ், முதலியன பெற்றனர். அதே சமயம் அலக்ஷயப்படுத்தி இருந்த தொழிற்சங்க இயக்கம் மகத்தான

சக்தியை முதலாளிகட்கும், அரசாங்கத்துக்கும் அவர்கள் நன்கு உணரும்படி செய்துவிட்டது பொருள், முதல் வாத தத்துவ கண்ணோட்டத்துடன் கூடிய தலைமையை ஏற்றும், தனக்கென ஒரு அரசியல் கட்சியைக் கட்டி வலுவான அமைப்பையும், வளைந்து கொடுக்காத தன்மையுடன், உறுதியான பலத்தையும் பெற்றிருந்த தொழிலாளி வர்க்கம் நாட்டு விடுதலை கோரி எழும் பெரும் புரட்சிப் பேரலையை சந்தித்து சமாளிக்கும் தகுதியையும் பெற்றிருந்தது.

1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்குமுறை அயோக்கிய தனத்தால் "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற நியாயமான உரிமைக் குரல் எழுப்பிய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரும், காந்தியடிகளும், கைதி செய்யப்பட்டனர். தேசிய இயக்க தலைமை முழுமையும், மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டதின் விளைவு தொழிலாளி வர்க்கத்தின் பொருப்பு அதிகரித்தது. ஏனென்றால் பொருளாதார சுரண்டலை அடிப்படையாகவும் உலக மார்க்கட்டை அடைவது லக்ஷியமாகவும் கொண்டு ஆரம்பித்த யுத்தம் ஏகாதிபத்திய பாஸிஸ சக்திகள் ஒருபுறமும், ஜனநாயக, உழைப்பாளி மக்கள் சக்தி ஒருபுறமும் அணிவகுத்து நிற்கும் நிலையில் யுத்த லக்ஷியம் மக்கள் யுத்தமாக மாறியது. ஏகாதிபத்திய, பாஸிஸ யுத்தவெறியர்களை எதிர்த்து நடைபெறும் யுத்தமுயற்சிகளுக்குச் சகல ஒத்துழைப்பையும் கொடுக்கவேண்டிய கடமையில் இருந்தது தொழிலாளர் வர்க்கம்.

இவ்வித சூழ்நிலையில் புரட்சிகரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாமலும், தேசிய இயக்க லக்ஷியத்தை நோக்கி

113016

முன்னே தள்ளவும், ஸ்தம்பித்து தேங்கிக்கிடக்கும் விடுதலை இயக்கத்தை இயங்குவிக்கும் திசையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையான இந்திய தேசிய தலைமையை மீண்டும் மக்களிடயே கொண்டுவர தொழிலாளிவர்க்கம் அரும் தொண்டாற்றியது. இந்திய தேசிய தலைவர்கள் விடுதலை கோரி எழுப்பிய இயக்கத்தை பாவலீஸ ஆதரிப்பு இயக்கமென்று கூறி அடக்கிவிட பெருமுயற்சி செய்தது பிரிட்டிஷ் அரசாங்கம்.

அரசாங்கத்தின் அடக்குமுறை சாவாலை ஏற்று அடக்குமுறையை எதிர்த்து தொழிற்சங்க காங்கிரஸ் எதிர்தாக்குதலை ஆரம்பித்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சூழ்ச்சிகளையும், மக்கள் முன்பு வெற்றிகரமாக அம்பலப்படுத்தியது. தொழிலாளி வர்க்கத்தின் திறமை மிகுந்த கிளர்ச்சியின் விளைவாக 1945-ம் வருஷம் காந்தியடிகளும், காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் மீண்டும் விடுதலை பெற்று வெளிவந்தார்கள்.

## (இடைக்கால சர்க்காரின் கீழ் தொழிலாளி வர்க்கம்)

1945 கோடையில் மத்திய சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவர் **புலாபாய் தேசாய்** — முஸ்லீம் லீக்கட்சி உபதலைவர் **லியாகத் அலிகான்** இருவருக்கும் ஏற்பட்ட ஓம்பந்த சரத்துகளின்படி காங்கிரஸ்—லீக் சம பிரதிநிதித்துவ அடிப்படையில் காந்தியடிகளின் சம்மதத்துடன் ஒரு இடைக்கால சர்க்கார் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிட்டிஸ் ராஜதந்திர சூழ்ச்சி காங்கிரஸ் — லீக் இருகட்சிகளும், ஒன்றையொன்று எதிர்த்து தாக்கிக்கொள்வதின் மூலம் பெரும் புயலை நாட்டில் கிளப்பும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. பஞ்சாப், வங்காளம், பீகார்

பம்பாய் முதலிய ராஜதானிகளில் பிற்காலத்தில் நடைபெற்ற பயங்கர வகுப்புக் கலகம் பிரிட்டிஸ் ராஜதந்திரம் ஈன்றெடுத்த அருஞ்சூழ்வியே. இவ்வித சூழ்வில் இந்திய தொழிலாளி வர்க்கம் பிரிட்டிஸ் ராஜதந்திர சூழ்ச்சியை வெட்டிச் சாய்த்திட, நாட்டின் அரசியல் ஆட்சி பீடத்தின் அரியாசனத்தில் வீற்றிருக்கும் பிரிட்டானியரை அகற்ற, தெளிவான அரசியல் கண்ணோட்டத்துடன், தனது அரசியல் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் தனது சக்தி முழுமையும் உபயோகித்தது. இந்திய பாட்டாளி வர்க்கம் தனது வாழ்வின் சின்னு பின்னத்துக்கெல்லாம் மூலகாரணம் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் என்பதை நன்ருக உணர்ந்தது. தனது வாழ்வைக்கொட்டிக் குலேத்தவரும் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் மீது கொதித்துக் கொப்பழித்து நின்ற கோபாக்கினி சகல பகுதி மக்களேயும், அரவணேத்துக்கொண்டு ஒரு பெரும் போராட்டத்துக்கு இந்திய தொழிலாளி வர்க்கம் தயாராகும்படி நிர்ப்பந்தித்தது.

## (கடற்படை எழுச்சி - காங்கிரஸின் முட்டுக்கட்டை - தொழிலாளி வர்க்கப்போர் முழக்கம்)

1946-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18ம் தேதி காலேயில் ஆரம்பித்த கடற்படை வீரர்கள் வேலே நிறுத்தம் வெகு வேகமாக பம்பாய், சென்னே, கல்கத்தா முதலிய துறைமுகங்களில் இருந்த சுமார் இருபதாயிரம் கப்பல் படை வீரர்களேயும் ஆட்கொண்டது. கப்பல்களில் இருந்த பிரிட்டிஸ் அரசாங்கத்தின் கொடியான "யூனியன் ஜாக்" தூக்கி எரியப்பட்டது. காங்கிரஸ் — லீக் — கம்யூனிஸ்ட் கொடிகள் ஏற்றப்பட்டு காம்பீரமாய் பறந்து கொண்டிருந்தது.

ஆரம்பத்திலேயே கடற்படை வீரர்கள் காங்கிரஸ்—லீக் கம்யூனிஸ்ட் — தலைமைகளிடம் கலந்து பக்கா கட்டுப்பாடுடன் எடுத்துக்கொண்ட வேலைநிறுத்த நடவடிக்கைகளைக் கண்ட பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் கட்டுக்கடங்கா வெறிகொண்டு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. போராட்ட வீரர்களைச் சுட்டுத்தள்ளியது.

இதைக்கண்ட கடற் படையின் மத்திய போராட்டக் கமிட்டி நாட்டு மக்களை சாத்வீகமாய் ஹர்த்தால் நடத்துமாறும் தொழிலாளிகளை அரசியல் வேலை நிறுத்தம் செய்யுமாறும் வேண்டிக்கொண்டதின் மூலம் அரசாங்க அடக்குமுறை சவாலுக்கு விடை தந்தது. பொது வேலை நிறுத்தமும், ஹர்த்தாலும் கூடாதென்று காங்கிரஸ் சார்பில் **சர்தார் வல்லபாய் படேலும், அபுல்கலாம் ஆஜாத்தும்** பொது மக்களையும், தொழிலாளிகளையும் வேண்டியும் கூட அவர்கள் வேண்டுகோளையும் மீறி நாட்டு விடுதலைகோரி போராடும் போர் வீரர்களுக்கு ஆதரவாக சகல தொழிலாளிகளும், கம்யூனிஸ்ட் கட்சியின் தெளிவான போராட்டப் பாதையின் உதவி கொண்டு 1946 பிப்ரவரி மாதம் 22ம் நாள் நூற்றுக்கு நூறு வெற்றிகரமான வேலைநிறுத்தம் செய்தனர்.

கடற்படை வீரர்களின் எழுச்சியும், அதற்கு நாட்டு மக்கள் தந்த மகத்தான ஆதரவைக் கண்டு பின்வருமாறு சிறப்பான முறையில் தன் கருத்தைத் தெரிவித்து பெருமிதம் கொண்டது கடற்படை வீரர்கள் போராட்டக் கமிட்டி.

> "நமது தேச வாழ்க்கையில் எங்கள் வேலை நிறுத்தம் ஒரு சரித்திர முக்கியத்துவம் பெற்ற சம்பவமாக இருக்கிறது. முதன்

முதலாக ராணுவத்திலுள்ளவர்களின் உதிரமும், தெருக்களில் உள்ள ஜனங்களின் உதிரமும், பொது லக்ஷியத்துக்காக ஒன்ருய் ஓடின. ராணுவத்திலுள்ள நாங்கள் இதை ஒருபொழுதும் மறக்கமாட்டோம். எங்களுடைய சகோதர சகோதிரிகளாகிய நீங்களும் மறக்கமாட்டீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். நமது மகத்தான ஜன சமூகம் நீடூழி வாழ்க!" ஜெய்ஹிந்த்!

1946 வருஷம் ஆரம்பத்தில் பக்குவமடைந்து கொண்டிருந்த புரட்சிகரமான சூழ்நிலையில் பல பகுதி பாட்டாளிகள் ஓரணியில் அணிவகுத்திருக்கின்றன என்பதை கடற்படை எழுச்சியும், நாட்டு மக்களின் போராட்டமும், தெளிவாக்கி விட்டது. பொதுஜனங்களின் போர்க்குணத்தையும் லக்ஷியத்தில் கொண்டுள்ள வைராக்கியத்தையும், நிதர்ஸனப் படுத்தின. இப் போராட்டங்களின் விளைவால் பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படையே கலகலத்துவிட்டதையும் அப்பட்டமாக்கி விட்டன.

## (பிரிட்டிஸ் அரசாங்க முடிவும் - நாட்டு விடுதலையும்.)

இவை எல்லாவற்றையும் கூட்டிப் பெருக்கி கழித்து ஆராய்ந்து பார்த்த பிரிட்டிஸ் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்தது. இனியும் இன்றய விடுதலை உணர்ச்சி மண்டிநிற்கும் உலக சூழ்வில் இந்தியாவை நீண்ட நாட்கள் பிரிட்டிஸ் பிடிப்பின் கீழ் வைத்திருக்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தது. 1946 பிப்ரவரி மாதம் 19-ம்நாள் காமன்ஸ் சபையில் இந்திய

விடுதலை பற்றி இந்தியத் தலைவர்களிடம் கலந்துபேச "காபினெட்மிஸனை" இந்தியாவுக்கு அனுப்ப முடிவெடுத்திருப்பதை பிரிட்டிஷ் பிரதமர் மிஸ்டர் **அட்லீ** அறிவித்தார். பிரிட்டிஸ் "காபினெட் மிஸன்" இந்தியாவுக்கு வந்தது. ஆள்பவர், ஆளப்படுபவர், என்ற இருதரப்பு அரசியல் திட்டங்களும் நீண்ட பரிசீலனைக்குள்ளாயின. இறுதியில் பிரிட்டிஷ் ராஜதந்திர சூழ்ச்சியின் ஞாபக சின்னமாக இந்திய உபகண்டமான பரந்த பாரத பூமியை இருகூறுக்கி, கொதித்துக் குமுறி எழுந்த இந்திய மக்கள் சக்தியின் முன் பணிந்து. 1947 ஆகஸ்ட்டு 15ல் பிரிட்டிஷ் அரசாங்கம் வேறுவகையின்றி தனது அரசியல் அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்றிக் கொடுத்தது.

## (நாட்டு விடுதலையும் - தொழிலாளி வர்க்க - உரிமையும் - கடமையும்.)

இந்தியர் அனைவரும் தனது வாழ்வைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும் ஒரு நிலை வந்துவிட்டது. இந்தக் காலக்கட்டம் இந்திய சமுதாய பொதுவாழ்வில் உள்ள ஒவ்வொரு பகுதியும், தனிமனிதனும் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய நிலை!

இன்றைய சமூதாய அமைப்பு பெரும் ஏற்றத்தாழ்வுள்ள ஒன்றுக்கொன்று நேர்மாறான முரண்பட்ட வர்க்க அமைப்புடன் கூடியதாய், வர்க்க போராட்டத்தின் தவிர்க்க முடியாத நிலைக்களனாய் இருக்கிறது. இந்த சமூதாய அமைப்பிலே வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மண்டி மல்கி நிற்கிறது. எனவே! இவ்வித நிலைமையை மாற்றி ஒரு புதிய சமூதாய அமைப்பு

காணவேண்டும் என ஒரு சாரரும், இந்த அமைப்பிலேயே சில சீர்திருத்தங்கள் செய்தலே போதும் என மற்றொரு சாரரும் கருதுகின்றனர். சமுதாய வாழ்வில், ஜனநாயக அமைப்பில், தொழிற்சங்கங்களின் சக்தியையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்த நிலையிலேயே பல்வேறு அரசியல் கண்ணோட்டம் கொண்டோரும் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிந்த பின்னும் தொழிலாளர்கள் லக்ஷகணக்கில் இந்திய தொழிற்சங்கத்தில் சேர்ந்து வர்க்க போதத்துடன் தனது லக்ஷியத்தை நோக்கி ராணுவ நடை போட்டதுடன், ஆள் குறைப்பு; சம்பளவெட்டு; வேலைப் பளு; முதலியவைகளை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் வீறு கொண்டு போராடுவதைக் கண்டு குல நடுங்கிய இந்திய பூர்ஷுவா வர்க்கமும், ஆலை முதலாளிகளும் காங்கிரஸ் தலைவர்கள் ஆதரவுடன் இந்துஸ்தான் 'மஸ்தூர் சேவாச்சங்கம்' என்ற ஸ்தாபனத்தை 1947-ம் வருஷம் பிர்லா மாளிகையில் வைத்து ஸ்தாபித்தனர். பின்னால் இந்த ஸ்தாபனம் தான் 1948ம் வருஷம் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸாக பரிணமித்தது.

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் வளர்ச்சிக்காக காலம் சென்ற **வல்லபாய் பட்டேல்** அவர்களிடம் இந்திய முதலாளிகள் லக்ஷகணக்கில் பணம் கொடுத்ததாக ஹிந்துபத்திரிக்கை கூறியது. (8—6—47) ஹிந்துவின் 7ம் பக்கம் — இந்த செய்கை மிகவும் அர்த்த புஷ்டியுள்ளதும் வெளிப்படையானது

யாகும். இவ்விதம் முதலாளித்துவ சக்திகளின் சிருஷ்டியான ஸ்தானம்தான் இந்தியதேசிய தொழிற்சங்க காங்கிரஸ் என்பதை இந்தியதேசிய தொழிற்சங்க தலைமையின் பிந்திய பல நடவடிக்கைகள் அம்பலமாக்கின. இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் 1947—48ல் அஸ்ஸாம் மாகாணத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மாநாடு கூட்டுவதற்காக அம் மகாநாட்டுப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வெள்ளை முதலாளி கள் உதவவேண்டுமென்றும், பிரதிநிதிகளுக்கு பிரயாண அல வன்ஸ், சம்பளத்துடன் கூடிய லீவ், சாப்பாட்டு வசதி மகா நாட்டுக்கு வசதியான இடம் ஆகியவைகளைக் கோரியும், எழுதி யிருந்த ரகசியக் கடிதம் வெளிப்பட்டது. இவ்விதம் ஐக்கியப் பட்டுத்தனது வாழ்வை செப்பனிட்டுக்கொள்ள வேண்டிய தொழிலாளி வர்க்கம் துரதிருஷ்டவசமாய் பிளவு படுத்தப்பட்டு வலுவிளந்து கிடக்கிறது. சுதந்திர குடியரசில் வாழும் தொழி லாளிவர்க்கம் சுயேட்சையான பாதை வகுத்து நடந்துகொள்ள உரிமை பெற்றுள்ள தொழிலாளி வர்க்கம் அரசியல் விழிப்பும், வர்க்க போதமும் பெற்றுள்ள தொழிலாளி வர்க்கம் தனது நல் வாழ்வை நோக்கி ராணுவ நடைபோட்டு விறைந்து செல்லும். இந்திய தொழிலாளி வர்க்கத்தின் முன் இன்று எழுந்துள்ள மகத்தான பிரச்சனை இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸா அல்லது அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸா என்பதல்ல. எந்த ஸ்தாபனம் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைக் காப் பாற்றி மேல்நோக்கிக்கொண்டு செல்கிறது என்பதே!

## தொழிலாளி வர்க்கத்திற்குத் - தெளிவான பார்வைவேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தோடு தொழிற்சங்க இயக்கத்தில் கலந்து தீவிரமான முறையில் பங்குகொண்டுள்ள அரசியல்

வாதிகளைத் தொழிலாளிகள் எடைபோட்டுப் பார்க்கவேண்டும். அவ்விதம் எடைபோட்டுப்பார்த்து தொழிலாளிவர்க்க உணர்ச்சியோடு வர்க்கபோதம் பெற்று தொழிலாளி வர்க்க நலனை கொஞ்சமும் விட்டுக்கொடுக்காத முறையில் தொழிலாளி வர்க்கத்துக்காக பாடுபடக்கூடிய நபர் யார்? அப்படிப்பட்ட நபர்களை தலைமையாகக்கொண்ட ஸ்தாபனம் எது? என்று தெளிவாகப் புரிந்துகொண்டு தன்னுடைய உணர்ச்சிகளை பிரதி நிதித்துவப்படுத்தக்கூடிய ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவேண்டும். தன்னுடைய வர்க்க உணர்ச்சிகளுக்கும், வழப்பமான வாழ்வு நலனுக்கும், தன்னுடைய இறுதி லக்ஷியத்துக்கும், புரம்பாகச் செல்லக்கூடிய ஸ்தாபனத்தைக் கண்கொண்டும் பார்க்க மறுக்கவேண்டும்.

இந்த உறுதிப்பாடுடன் இந்திய தொழிலாளிகள் இந்திய தொழிற்சங்க இயக்கத்தை பரிசிலனை செய்து பார்த்தால் சென்ற கால வரலாற்றிலிருந்து பல உண்மைகளை காண முடியும். அந்த உண்மைகளின் மூலம் தொழிற்சங்க ஊழியர்களின் உடையில் இருக்கும் தன்னுடைய வர்க்க நலனுக்கு மாறுபட்டவர் யார் என எளிதில் உணர்ந்து கொள்ளமுடியும், இந்த மகத்தான பரிசீலனைக்கு முன்பு போலிகளின் தொழிற்சங்க ஊழியர் உடை கிழித்தெரியப்படும் தொழிலாளிகட்கு இன்று தேவைப்படுவது ஒன்றுபட்ட சக்தியே! இந்த நாட்டில் பல தொழிலாளிகளை ஒன்றுதிரட்டி, ஒரிடத்தில் கூட்டி, ஒரே தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழில் ஸ்தாபனங்கள் தோன்றிய பின்பு, தொழிலாளிகட்கு என ஏற்பட்ட தொழில் சட்டங்களால் கிடைக்கக்கூடிய நன்மைகளை பூரணமாகக் கிடைக்கச் செய்யவும், பிற்கால நல்வாழ்வுக்கு உத்தரவாதம் செய்யவும் சமுதாய அமைப்பு எப்படி இருக்கவேண்டும்

மென்பதைத் தெட்டத் தெளிவாக்கி வைக்கும் தத்துவ கண்ணோட்டத்துடன் கூடிய தலைமையின் கீழ் தொழிற்சங்க இயக்கம் இயங்க வைக்கவேண்டியது. தொழிலாளிகளின் உடனடி கடமை. அதுவும் அரசியல் சுதந்திரம் பெற்று தன்னைத்தானே அரசோச்சும் இன்றைக்கு தொழிலாளிகளின் தவிர்க்க முடியாத கடமை. அந்த அளவுக்கு இந்திய தொழிற் சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருக்கும் தொழிற் சங்க ஊழியர்களும் பின் கண்ட விஷயங்களைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

**( தொழிற்சங்க சட்டங்களும் -- அவைகளின் சாதகபாதகங் களும் - எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் )**

1926-ம் வருஷம் "**இந்திய டிரேட் யூனியன் ஆக்ட்**" என்ற சட்டம் நிறைவேற்றப் பட்டது. இந்த சட்டத்தின் கீழ் ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கும் 7 தொழிலா ளர்களோ அல்லது முதலாளிகளோ சேர்ந்து ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதை ரிஜிஸ்டர் செய்து கொள்வதற்கு உரிமை யுண்டு. ஆனால் இந்த சட்டத்தினால் எவ்வித பிரயோஜனமும் தொழிலாளருக்கு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கத்தை முதலாளிகள் அங்கீகாரம் செய்யத் தான் வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் கிடையாது. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகம் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும் அதனுடைய வரவு செலவு கணக்குகளை ஆடிட்டரைக் கொண்டு பரிசோதனை செய்யவேண்டும் என்றும் உள்ள சில சரத்துக்களே இச்சட்டத்தினுடைய சாராம்சம்.

இந்திய பாக்டரி ஆக்டின் மூலமாக அரசாங்கம் பாக்டரி சட்டத்துக் குட்பட்ட தொழிற்சாலைகளின் மெஸனரியின் மூலமாக தொழிலாளிகளுக்கு ஏற்படக்கூடும் ஆபத்துக்களை தடுப்பதர்க்கு சில பாதுகாப்புகளை அளித்திருக்கின்றன. மேலும் முதல் முதலில் வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டுமென்றும் 60 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்யக் கூடாது என்றும் இச்சட்டம் கூறிற்று. பின்னால் 1932-ல், செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின் வாயிலாக இது 54 மணி நேரமாகவும் பின்னர் 48 மணி நேரமாகவும் குறைக்கப்பட்டது.

**"ஒர்க்மென்ஸ் காம்பென்ஸேஸன் ஆக்ட்"** என்ற சட்டத்தின் கீழ் பாக்டரிகளில் வேலை செய்யும் போது ஆபத்து ஏற்பட்டு அவர்களுடைய அங்கங்களுக்கோ, உயிருக்கோ **ஹானி** ஏற்படுமாயின் நஷ்டயீடு கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது.

**"மெட்டர்னிட்டி பெனிபிக்ட் ஆக்ட்"** என்ற சட்டத்தின் கீழ் பாக்டரிகளில் வேலை செய்யும் பெண்கள் கர்ப்பவதிகளானால் பிரசவத்துக்கு ஒருமாதம் முன்னாலும் ஒரு மாதம் பின்னாலும் கட்டாயம் லீவ் கொடுக்கப்பட வேண்டும் என்றும், இந்த லீவ் காலத்தில் அவர்களுக்கு 7 வாரங்களுக்கு ஒரு தினத்திற்கு 0–8–0 வீதம் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் திரும்ப அவர்கள் வேலைக்கு வந்தால் கட்டாயம் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இச்சட்டம் கூறுகிறது.

1929-ல் நிறை வேற்றப்பட்ட **"டிரேட் டிஸ்பூய்ட்"** ஆக்ட் பிரகாரம் ஒரு தொழில் தகராறு ஏற்பட்டால் மத்தியஸ்தத்திற்கு விடுவதற்கு சட்ட பூர்வமான முறையொன்று ஏற்

படுத்தப்பட்டது. ஏதாவது ஒரு சார்பார் அரசாங்கத்துக்கு எழுதினல் அரசாங்கம் அவசியமென்றுகருதினல் ஒரு விசாரணை கோர்ட்டையோ, அல்லது சமரச போர்ட்டையோ ஏற்படுத்தலாம். மேலும் அரசாங்கம் தானுகவே கூட ஏற்படுத்தலாம். இரண்டு சாரரும் சேர்ந்து சர்க்காரைக் கேட்டால் அரசாங்கம் கட்டாயம் சமரச போர்ட்டையோ அல்லது விசாரணைக் கோர்ட்டையோ ஏற்படுத்த வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் ரயில்வே முதலிய பொது நல உபயோக சர்வீஸ்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள் இரண்டுவார நோட்டீஸ் கொடுக்காமல் வேலை நிறுத்தம் செய்வார்களேயாயின் அவ்வேலை நிறுத்தம் சட்டவிரோதமாகும்.

1936-ல் நிறைவேற்றப் பட்ட சர்பளப்பட்டுவாடா சட்டத்தின் மூலம் 1000 தொழிலாளிகளுக்கு குறைவாக வேலை செய்யும் தொழிலாளிகளுக்குச் சம்பல காலத்துக்குப் பிறகு — ஒரு நாளோ, ஒரு வாரமோ மாதமோ, ஏழு நாட்களுக்குள்ளும் 1000த்துக்கும் மேற்பட்ட தொழிலாளிகளில் பத்து நாட்களுக்குள்ளும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும் ரூபாய் ஒன்றுக்கு அரையணுவுக்குமேல் அபராதம் விதிக்கக்கூடாது என்றும் தொழிலாளிகள் ஏற்றுக் கொண்டிருக்கிற கோவாப்ரேட்டிவ் சொசைட்டிகளைத் தவிர மற்றவைகளில் அவர்களுக்கிருக்கும் கடன் பாக்கிக்காக சம்பளத்தில் பிடித்தம் செய்யக்கூடாதென்றும் சட்டம் கூறுகிறது. பத்து தொழிலாளிகளுக்கு மேல் சேர்ந்தாற்போல் எவ்விதகாரணமுமில்லாமல் வேலைக்கு வராமல் நிற்பார்களேயானுல் ஏழு நாள் கூலி அபராதமாகப் பிடிக்கலாமென்றும் இந்தச் சட்டம் கூறுகிறது.

1937-ம் வருஷத்துக்குப் பிறகு இந்திய தொழிலாளர் இயக்கம் வெகுவேகமாக முன்னேறியிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பலவேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இந்த வேலை நிறுத்தங்கள் 1930—32ல் இருந்ததைப்போன்று தொழிலாளருக்கு ஏற்கனவேயே கிடைத்திருந்த வாழ்க்கை வசதியைக் காப்பாற்றிக் கொள்வதற் கல்லாமல் இன்றும் அதிகசம்பளம் வேண்டும் லீவ் முதலிய வசதிகள் வேண்டும் என்பதற்காகவும் இருக்கும் ஆக்கிரமிப்புப் போராட்டங்களாகவே நடைபெற்றன. ஓரளவு வெற்றியும் பொதுவாக எல்லாத் தொழிலாளிகளுக்கும் கிடைத்தது. இந்த சந்தர்ப்பத்தில் "**டிரேட் டிஸ்பூய்ட் ஆக்ட்**" என்ற சட்டத்தை இந்திய தொழிலாளர் இயக்கம் வெகுவாகப் பயன் படுத்திக் கொண்டது.

தொழிலாளர் இயக்கம் கடந்த வருஷங்களில் வெகு தூரம் முன்னேறிய போதிலும் ஏற்பட்ட சாதமான நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அது முன்னேறவில்லை. இதற்குக் காரணம் தொழிசங்க ஊழியர்களிடம் இருக்கும் குறைபாடுகளேயாகும்.

முதலாவதாக:— தொழிற்சங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஏற்படும் காலங்களில் பொதுவாக மேடைப் பிரசங்கிகளாக தொழிலாளரிடையே செல்கிறார்களேயன்றி எத்தனையோ அனுபவபோதம் பெற்றிருக்கும் இன்னும்கூட 24மணி நேரமும் தொழிலாளரிடையே பழகி அவர்களுடன் இரண்டரக்கலந்து விடுவது தொழிற்சங்க ஊழியர்களின் அசட்டை செய்யக்கூடாத கடமை என்பதை உணரவேண்டும்.

இரண்டாவதாக:— தொழிலாயர்களின் தினசரிப்பிரச் சனைகளைத் தொழிற்சங்க ஊழியர்கள் சரிவரக் கவனிப்பதில்லை வேலை நிறுத்தமில்லாத சாதாரண காலங்களில் தொழிற்சங்க ஊழியர்களுக்குப் பல விதவேலைகளுண்டு. உதாரணமாக **“மெட்டர்னிட்டி பெனிபிக்ட் ஆக்ட்” “ஒர்க்மென்ஸ் காம்பென் ஸெஸன் ஆக்ட்”** முதலிய சட்டங்களின் கீழ் நியாயமாகத் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய வசதிகளெள்லாம் கொடுக்காகல் முதலாளிகள் தொழிலாளிகளை ஏமாற்றி வருகிறார்கள். இவைகளைத் தடுக்க வேண்டியது தொழிற்சங்க ஊழியர்களின் கடமை. இவைகளின் கீழ் ஏற்படும் ஒவ்வொரு வழக்கையும், சங்கத்தின் மூலமாக நடாத்துவதற்கு தொழிற்சங்க ஊழியர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு தொழிற்சங்க ஊழியர்கள் முதலில் இன்றைக்குள்ள சட்டங்கள் சரிவர அறிந்துகொள்வதும் தொழிலாளர்கள் அவைகளை உணருமாறு செய்வதும் அத்தியாவசியமானது.

மூன்றாவதாக:— உற்சாகமுள்ள தொழிலாளருக்குப் பயிற்சி அளித்து அவர்களைச் சங்க ஊழியர்களாக செய்வதற்கு முயற்சி எடுப்பதில்லை. சங்கத்தின் வேலைகளில் அவர்களுக்குப் பொறுப்பை அளிக்காமல் இரண்டொரு முக்கியமான நபர்களே எல்லா வேலைகளும் கவனித்து நடத்திக்கொண்டு போவதாகும். இந்த நிலைமையை மாற்றவேண்டியது உடனடி கடமையாகும்,

நான்காவதாக:— வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னால் அடக்கு முறையை சமாளிப்பதற்கு போதிய ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும். முக்கியமான நபர்களை கைதியாக்கப் படு

வார்களையானுல் வேறு நபர்கள் அந்த இடத்தில் வந்து அவர்கள் செய்துவந்த வேலையைத் தொடர்ச்சியாக நடத்த முன்னேற்பாடுகள் செய்ய வேண்டியதவசியம், மேலும் வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னுல் அநேகமாக எல்லோரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடிய அளவுக்குப் பிரசாரமும் செய்திருக்கவேண்டும். பொது ஜனங்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக எல்லாமுயற்சிகளையும் கையாளவேண்டும்.

ஐந்தாவதாக:— வெற்றி ஏற்பட்ட பிறகு அந்த வெற்றியைக்கண்டு அதிகச் சந்தோஷப்பட்டு சும்மா இருந்து விடாமல் ஸ்தாபனத்தைப் பலப்படுத்த அதை உபயோகித்து நீடித்து வேலை செய்யவேண்டும்.

ஆருவதாக:— வேலை நிறுத்தத்தில் தோல்வி ஏற்பட்டால் அது தோற்றதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து செய்த தவறுகளையும், பலஹீனங்களையும், பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒன்றையும் ஒழிக்கக்கூடாது இயற்கையாக அந்த சந்தர்ப்பத்தில் தொழிலாளிகளுக்குச் சோர்வு ஏற்படும். ஏற்படுவது சகஜம். அதைக்கண்டு தொழிற்சங்க ஊழியர்கள் மனம் கலங்கக்கூடாது. பல தொழிலாளிகள் பழி வாங்கப்படலாம், பழிவாங்கப்படுவார்கள். இவர்களைக் கைவிடக்கூடாது. இவர்களோடு தனித்துப் பேசியும் கூட்டத்தில் கிளர்ச்சி செய்வதின் மூலமாகவும் இவர்களைச் சங்கத்தின் பிரதான ஊழியர்களாக மாற்றவேண்டியது கண்முன் உள்ள மகத்தானக் கடமை.

* * * * *

ஏழாவதாக:— தொழிற்சங்கங்களைப் பற்றி போதிய அளவு பிரசாரம் செய்யப்படவில்லை. அதன் விளைவாக ஆங்காங்கே சில தொழிற் சங்கங்கள் மிகத்தீவிரமான போராட்டங்கள் நடத்திய போதிலும் இந்திய தொழிற்சங்க இயக்கம் ஒன்று சேர்ந்து தங்களது பொதுவான கோரிக்கைகளுக்காக போராட்டங்கள் நடத்துவது சாத்தியமில்லாது போய்விடுகிறது. எனவே தொழிற்சங்கங்களைப் பற்றி நல்ல பிரசாரங்கள் தேவை!

மேற் கூறிய பலபிரச்சனைகளையும் கண்டு சிந்தித்து முறையான திட்டமுடன் விட்டுக் கொடுக்காத வைரம் பாய்ந்த லக்ஷிய கண்ணோட்டத்துடன் இந்திய தொழிலாளிவர்க்கம் முன்னேறவேண்டும். அதன் மூலம் நாட்டு நலனையும் சகமக்களின் மேலான சுபிக்ஷ வாழ்வையும், உத்தரவாதம் செய்ய முடியும்.

முற்றும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
113016
MADRAS-600 008

வாங்குங்கள்! படியுங்கள்!! நடியுங்கள்!!!

# குஹன் பதிப்பகத்தாரின்

## குதூகல வெளியீடு!

அநேக அறிஞர்களின் ஆசி உரையுடன் தயாராகிறது

# நட்பின் பெருமை

(மாணவர் நாடகம்)

வள்ளுவர் குறளை வளமுடன் போதிக்கும்
வன்மையான ஏடு, மாணவர்களின்
வாழ்க்கைக்கு இது ஓர்
வழிகாட்டி,

நடிப்பதற்கு ஏற்ற சிறந்த முறையில் குறைந்த
விலையில் வெளியிட முயற்சிக்கிறோம்.

ஏராளமாக விற்பனையாகிறது A. கலைக்குஹன் எழுதிய

# இன்பவாழ்வு

**விலை அணா 0—10—0**

* எங்கே உங்கள் ஆர்டர்கள்?
* அள்ளிக்கொடுங்கள் பார்க்கலாம்.

விபரங்கட்கு அணுகுக:—

**குஹன் பதிப்பகம்,**

செட்டியார்பட்டி P. O. தளவாய்புரம். வழி ராஜபாளையம்

# "ராம மூர்த்தி விலாஸ்"

## ராஜா லாலா மிட்டாய் ஸ்டால்

புதுபஸ்ஸ்டாண்டு – **இராஜபாளையம்.**

**அன்புடையீர்!**

நாவிற்கு ருசியான இனிப்புப் பதார்த்தங்கள் தேவையா? சூடானகாரச் சரக்குகள் தேவையா? இதோ? அணுகுங்கள். எமது ஸ்டாலுக்கு, பரந்த அனுபவமும், சிறந்த முறையில் உடனுக்குடன் சொந்த முறையில் தயாரித்துள்ளோம், **ஸ்பெஷல் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படுகிறது.**

இராஜமா நகரில் (இராஜபாளையம்) தனக்கு நிகரில்லை யென வெற்றிக் கொடிநாட்டிவரும் எமது லாலாக் கடைக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள். உண்மை விளங்கும்!

**அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது நன்றி.**

நிர்வாகி,

**V. S. கிருஷ்னமராஜா.**

இராஜபாளையம்

---

**சிறுவர் பாடல்** **"படிடா தம்பி"** **விலை 0—1—0**

இலக்கியத்தைக் காணத்துடிக்கும் இன்றைய இளம் பாலகர்களுக்கு ஈடு இணையில்லாமாணிக்கம். இதோ! மோகன் பதிப்பகத்தார், அளித்த, "தங்க நிழல்" தீட்டிய **"படிடா தம்பி"** பாட்டுப்புஸ்தகம். உள்ளம் புரமும் உவகையில் ஆழ்த்தும் உன்னதப்பாடல்கள் நிறைந்தது. சிறுவர்களுக்கு ஏற்ற புத்தகம்.

**இதோ. அடுத்த பொக்கிஷம். அச்சில்:-- "மலைவாசல் மங்கம்மா"**

அணுகுக:— மோஹன் பதிப்பகம்,

ஆயப்பாடி P. O தஞ்சை ஜில்லா.

X97D.தி5
N55

நீராத்திலிங்க அய்யனுர் துணை.

# "நீராத்திலிங்க அய்யனுர் விலாஸ்"

## கைத்தறி - ஜுன்னடி - உற்பத்தித் தொழிற்சாலை,

## கொம்மந்தாபுரம்.

—*—

தென்னுட்டுக் கைத்தறிச் சேலைகளிலே தனக்கு நிகரில்லை யென வெற்றிக்கொடி நாட்டிவரும் **"நீராத்திலிங்க அய்யனுர் துணை"** கைத்தறி – ஜுன்னடி – சேலைகளை வாங்கி உபயோகியுங்கள்.

கெட்டிச்சாயம் – கண்கவர் வர்ணம், கண்ணைப்பறிக்கும் கற்பனைச் சித்திரங்கள் இவையாவும் ஒருங்கே அமைந்து விளங்கிடும் சேலைஇது ஒன்றே!

சாயத்தின் தரத்திற்கும், சேலையின் உழைப்பிற்கும் கியாரண்டி அளிக்கப்படும்.

ஆகவே அன்பர்களும், அன்பிற்குப்பாத்திரமான சகோதரிகளும், தாய்மார்களும், வாடிக்கைக் காரர்களும், வியாபாரிளும் எமது கைத்தறி ஜுன்னடிச் சேலைகளையும் மற்றும் பலவித புதிய ரக தினுசுகளும், உயர்ந்த ரகத்தில், குறைந்த விலையில் உத்திரவாதத்தோடு அளித்து வருகிறோம். பொதுமக்கள் அனைவரும் எமது ஜவுளிகளை வாங்கி ஆனந்தமடையுங்கள்.


உங்கள் அனைவருக்கும் எமது வணக்கம்.

உரிமையாளர் **T. பொன்னையாத்தேவர்.**

கைத்தறி – ஜுன்னடிச் சாயத் தொழிற்சாலை,

**கொம்மந்தாபுரம்.** தளவாய்புரம் (வழி) இராஜபாளையம்.

வெற்றிவேல் பிரிண்டிங் பிரஸ், இராஜபாளையம். 10–55




# தேசிய சங்கர விலாஸ்

### உள்ளூர் வெளியூர் வாசிகளுக்கு

# ஓர் நற்செய்தி

அன்புடையீர்!

எங்கள் மரக்கடையில் தேக்கு, தேக்குப்பலகை, மாம்பலகை, கிடுகு, வைமரை வகையரு, மஞ்சக்கடம்பை, பாச்சிக்கம்பு தினுசுகள், வண்டிகளுக்கு வேண்டிய சாமான்களும், விறகு, சில்லரைக்கும், மொத்தமாகவும், பனைசட்டங்கள், இன்னும் இதர கட்டிடசாமன்கள் குறைந்த விலையில் உயர்ந்த ரகங்களாக சப்ளைசெய்து வருகிறோம்.

ஆகையால் அன்பர்கள் அனைவரும் எமது மரக்கடையில் விஜயம் செய்து எங்கள் வியாபாரத்தை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

புரோப்:- **க. காளியப்ப நாடார்,**

குமந்தாபுரம், செட்டியார்பட்டி. P. O.

(வழி) இராஜபாளையம்.



A. பார்த்தஸாரதி ——— A: கலைக்குஹன்

எழுதும்

எமது அடுத்த வெளியீடுகள்

## பஞ்ச சீலமும் —

## உலக சமாதானமும்

---

## 'நட்பின் பெருமை'

(மாணவர் நாடகம்)

கதை-வசனம் A. கலைக்குஹன்

வெளியிடுவோர்-குஹன்பதிப்பகம்

வள்ளுவன் குறளைப்படித்தால் மட்டும் போதாது. அதன்படி நடந்து காட்டி வள்ளுவர் சிறப்பை வகையுடன் நாடெங்கும் பரப்பவேண்டும் என்பதை விளக்கும் ஓர் விடிவெள்ளி.

விலை அணா 0-4-0 V. P. P. கிடையாது

அணுகுக:—

**குஹன் பதிப்பகம்,**

**தளவாய்ப்புரம், செட்டியார்பட்டி P. O.**

**(வழி) இராஜபாளையம்.**